**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

**நிதிச் சுற்றறிக்கைக் கடித இலக்கம் 4/2012**

2012 ஏப்ரல் 25ம் திகதி

பல்கலைக்கழக உப வேந்தர்கள்,

நிறுவக பணிப்பாளர்கள்,

வளாக தலைவர்கள்.

**பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுக்கான சொத்து கடன் திட்டம்**

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளரால் 2012 ஏப்ரல் மாதம் 16ந் திகதியிடப்பட்ட கடித இலக்கமான BD/HRD/171/9 கடன் மூலம் அங்கீகரிக்கப்பட்டதற்கிணங்க, உயர்கல்வி அமைச்சின் செயலாளர் தனது 2012 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் திகதியிடப்பட்ட கடித இலக்கமான HE/AD - மூலம் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுக்கான 'சொத்து' கடன் திட்டத்தை அறிவித்துள்ளார்.

அதன்படி, 2012ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் சுற்றறிக்கையால் குறிப்பிடப்பட்டுள்ள முறையான வழிமுறைகளுக்கமைய, பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களானவை மேற்படி சொத்து கடன் திட்டத்தை அமுல்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இச்சுற்றறிக்கையை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் இணைத்தளமான- www.ugc.ac.lk என்பதனூடாக பெற்றுக்கொள்ளமுடியும்.

பேராசிரியர் S.V.D.G. சமரநாயக்க

தலைவர்

பிரதிகள்

1. செயலாளர்/ உ.கல்வி அமைச்சு
2. பிரதி தலைவர் / ப.மா.ஆ..
3. செயலாளர்/ ப.மா.ஆ.
4. மேலதிக செயலாளர் / ம.வ. / பல். விவகாரங்கள்
5. கணக்காளர் / ப.மா.ஆ.
6. பல்கலைக்கழக பதிவாளர்கள்
7. பல்கலைக்கழக நிதியாளர்கள்
8. நிறுவக / வளாகத்தின் சிரேஷ்ட உதவி / உதவிப் பதிவாளர்கள்
9. நிறுவக / வளாகத்தின் சிரேஷ்ட உதவி / உதவி நிதியாளர்கள்
10. சிரேஷ்ட உதவிச் செயலாளர் / ஆளணி / ப.மா.ஆ.
11. பிரதான உள்ளக கணக்காய்வாளர்/ ப.மா.ஆ.
12. கணக்காய்வாளர் நாயகம்
13. அரசாங்க கணக்காய்வு மேற்பார்வையாளர் / ப.மா.ஆ.
14. அரச கணக்காய்வு மேற்பார்வையாளர்கள் / பல்கலைக்கழகங்கள்

# பல்கலைக்கழகங்கள்/உயர் கல்வி நிறுவன உத்தியோகத்தர்களுக்கான சொத்துக் கடன் திட்டம்

பல்கலைக்கழக உத்தியோத்தர்களுக்காக, அரச வங்கிகள் ஊடாக சொத்துக் கடன் பெறுவதற்காக பின்வரும் வழிமுறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**01. அரச வங்கிகள் ஊடாக சொத்துக் கடன் வழங்கல்**

ஒரு கடன் வழங்கப்படக் கூடிய நோக்கமானது பின்வரும் வழிமுறைகளின் கீழ் அமையும்.

(i) ஒரு வீடு கட்டுவதற்கு பொருத்தமான கட்டுமானப் பரப்பு ஒன்றை வாங்குதல்.

(ii) விண்ணப்பதாரிக்கு சொந்தாமான காணி ஒன்றில் வீடு ஒன்றை கட்டுதல்.

(iii) ஒரு மாடி வீடு அல்லது காணியுடன் கூடிய வீடு ஒன்றை வாங்குதல்.

(iv) ஏற்கனவே கட்டப்பட்ட ஒரு வீட்டிற்கு விளையக்டகூடிய முன்னேற்றங்கள் அல்லது மேலதிகமான சேர்க்கைகள்.

(v) பகுதியளவில் கட்டப்பட்ட வீடு ஒன்றைப் பூரணமாக முடிப்பதற்குரிய வேலை

**02. கடன் பெறுவதற்கான தகுதிகள்**

(i) அவன்/அவள் 1978 ம் ஆண்டைய 16ம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் ஊழியராக இருத்தல் வேண்டும்.

(ii) அவன்/அவள் தமது நியமனத்தில் குறைந்தது 5 வருட கால சேவையை உறுதிப்படுத்திய ஊழியராக இருத்தல் வேண்டும்.

(iii) குறிப்பிட்ட ஊழியர் மற்றும் அவரது துணைவர்கள் இருவரும் பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிறுவனத்தின் ஊழியர்களாக இருக்கும் பட்சத்தில் இருவரும் தனித்தனியே தமது சம சொத்தின் முன்னேற்றம் / தனிப்பட்ட சொத்தின் விருத்திக் குரிய கடனுக்கான தகுதிகளைப் பெறுவார்கள்.

(iv) விண்ணப்பதாரியானது துணைவர் ஒரு அரச ஊழியராக இருந்து அவன் / அவள் அரச சேவை சொத்து கடன் திட்டத்தின் கீழ் கடன் பெற உரித்தாகி இருக்கும் பட்சத்தில் குறிப்பிட்ட பல்கலைக்கழக / உயர் கல்வி நிறுவன ஊழியர் மேற்படி சொத்து கடன் திட்டத்தின் கீழ் தனிப்பட்ட ரீதியாக - அவரது சம சொத்து/ தனிப்பட்ட சொத்தின் முன்னேற்றத்துக்கான கடனைப் பெறுவதற்கு உரித்துடை யவராவார்.

(v) இத்திட்டத்தின் கீழ் ஒரு கடனானது ஒருவருடைய சேவைக் காலத்தில் ஒரு முறை மட்டுமே வழங்கப்படுகின்றது.

**03. கடனைத் திருப்பி செலுத்துவதற்குரிய காலம்**

மொத்த கடன் பெறுமானமானது ஆகக்கூடிய 15 வருட காலப் பகுதியினால் அல்லது கல்வி சாரா உத்தியோகத்தராக இருக்கும் பட்சத்தில் அவரது 60 வயது முடிவிலும் அத்துடன் ஊழியர் ஒரு கல்விசார் உத்தியோகத்தராக இருக்கும் பட்சத்தில் அவருடைய 65 வயது முடிவிலும் எதுவாயினும் முதலில் செலுத்தப்பட வேண்டும்.

**04. கடன் தொகை**

(i) ஒரு ஊழியர் குறித்துரைக்கப்படக்கூடிய அதி கூடிய கடன் தொகையானது பின்வரும் திட்டத்தின் கீழ் அமையும்.

(அ) பதவிநிலை சாராத தர ஊழியர்கள் - ரூபா 1,000,000/-

(ஆ) கல்வி சாரா மற்றும் கல்விசார்

பதவி நிலை தர உத்தியோகத்தர்கள் - ரூபா 2,000,000/-

(ii) யாரேனும் ஒரு ஊழியர் மேற் குறிப்பிட்ட வரையறுத்த தொகைக்கப்பால் மேலதிக மான கடனைப் பெறுவதற்கு விரும்பிய சந்தர்ப்பத்தில் அவருக்கு அரசாங்கத்தின் பகுதிகளில் எந்தவித பொறுப்புக்களும் இல்லாதவிடத்து, வங்கியால் விதிக்கப்படும் பொது நிபந்தனைகளுக்கேற்ப உடன்படிக்கை ஒன்றை வங்கியுடன் செய்து கொள்ளக்கூடியதாய் இருக்கும்.

**05. வட்டி**

(i) இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கேற்ப உழியரிடமிருந்து பின்வரும் வருடாந்த வட்டி வீதம் அறவிடப்படும்.

(அ) 1 மில்லியன் வரை - 7.0 %

(ஆ) 1 மில்லியனுக்கு மேல்

மற்றும் 2 மில்லியன் வரை - 9.0%

(ii) மொத்த கடன் தொகையானது முழுமையாக அறவிடப்படும் வரை அரசாங்கமானது ஆகக்கூடிய (5) (i) (அ) இல் குறிப்பிடப்பட்ட கடனுக்காக, 5.5% அளவிலான வட்டி வீதத்தையும் (5) (i) (ஆ) வில் குறிப்பிடப்பட்ட கடன் தொகைக்காக 5% வீதமளவு வட்டியையும் செலுத்துவதற்கு பொறுப்பேற்றுக்கொள்ளும்.

(iii) கடனின் குறையும் மீதியின் அடிப்படையில் வட்டி வீதம் கணிக்கப்படும்.

## 06. பாதுகாப்பு

இந்நோக்கத்திற்காக, கடன் சம்பந்தமாக விண்ணப்பிக்கப்படும் குறிப்பிட்ட சொத்தானது வங்கிக்கு அடமானம் வைக்கப்படும்.

## 07. கடன் வழங்கும் வங்கிகள்

பின்வரும் வங்கிகளின் கிளைகள்/ தலைமை அலுவலகங்கள் கடன் வசதிகளை வழங்கும்.

* இலங்கை வங்கி (இ.வ)
* மக்கள் வங்கி (ம.வ)
* தேசிய சேமிப்பு வங்கி (தே.சே.வ)

## 08. கடன் தவணைக் கொடுப்பனவுகளின் அறவீடு மற்றும் கொடுக்க வேண்டிய பங்களிப்பு தொகை

(i) குறித்த ஊழியர் தொழில் புரியும் குறிப்பிட்ட பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்களானவை வங்கியால் சிபாரிசு செய்யப்பட்ட கடன் தவணைப் பணத்துடன் கழிக்கப்படக்கூடிய வட்டியையும் சேர்த்து ஊழியரின் சம்பளத்திலிருந்து குறிப்பிட்ட வங்கிக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளை அனுப்பும். அத்துடன் அரசாங்கத்தினால் பொறுப்பேற்ற வட்டியும் கூடவே செலுத்தப்படும்.

(ii) அரசாங்கத்தால் ஊழியர் சார்பாக பொறுப்பேற்கப்பட்ட வட்டித் தொகையானது அரசாங்கத்தின் செலவாக கணக்கிற்கு கொண்டு வரப்படும்.

## 09. கடன் தவணைக் கொடுப்பனவின் மீதிகள்

(i) பின்வரும் பிரச்சினை காரணமாக ஊழியருக்கு வேதனம் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் / உயர் கல்வி நிறுவனங்களின் தலைவர்கள் உடனடி யாக உரிய வங்கிகளுக்கு குறிப்பிட்ட கடன் தவணைப் பணம் அறவிடப்பட வில்லை என்பதை அறிவிக்க வேண்டும்.

(அ) பதவியிலிருந்து நீங்குதல் ரத்துச் செய்தல் நிகழுமிடத்து வங்கியின் பொதுவான விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(ஆ) பதவியிலிருந்து நீங்குமிடத்து, பதவியை ரத்துச் செய்யுமிடத்து, அல்லது பதவி இடை நிறுத்தம், மற்றும் சேவையில் இருந்து ஓய்வு பெறும் சந்தர்ப்பங்களில் கடன் தவணைக் கொடுப்பனவுகளானவை அரசாங்கத்தால் செலுத்தப்படக்கூடிய வட்டி மாற்றங்களுடன் சேர்த்து தனிப்பட்ட ரீதியாக குறிப்பிட்ட விண்ணப்பதாரியால் தாம் கடன் பெற்ற வங்கிக்கு அதனுடைய விதிமுறைகள் மற்றும் ஒழுங்குகளுக்கேற்ப செலுத்தப்பட வேண்டும்.

(ii) ஒரு இடைநிறுத்தப்பட்ட ஊழியர் மீண்டும் சேவையில் இணைந்து கொள்ளுமிடத்து, இடைநிறுத்தப்பட்ட காலப் பகுதிக்குள் ஊழியரால் செலுத்தப்பட்ட, அரசாங்கத்தால்

செலுத்தப்படக்கூடிய கடன் தவணைக்கான வட்டியானது பின்வரும் நிபந்தனைகளுக் கமைய மீள் நிரப்பப்படும்.

(அ) விடுவிக்கப்பட்டு மீண்டும் சேவையில் ஒரு ஊழியர் இணைந்து கொள்ளுமிடத்து, கடன் தவணையில் சேர்க்கப்பட்ட அரசாங்கத்தால் செலுத்தப்படகூடிய மொத்த வட்டித் தொகையானது அவன் / அவளுக்கு முழு அளவில் மீள் நிரப்பப்படும்.

(ஆ) சேவையில் மீண்டும் இணைந்து கொண்ட ஊழியர் ஏதாவது ஒரு தண்டனைக்கு உள்ளாகி, அத் தண்டனை நிலைமையை எதிர்கொள்ளாத விடத்து, ஏற்கனவே செலுத்தப்பட்ட தவணைக் கொடுப்பனவில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அரசாங்கத்தால் செலுத்தப்பட கூடிய வட்டித் தொகை யின் அரைவாசித்தொகை மட்டுமே மீள் நிரப்பப்படும்.

(iii) ஓர் ஊழியர் ஒரு கட்டாய விடுமுறையின் பேரில் அமர்த்தப்படுமிடத்து கடன் தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டி ஆகியவை வழக்கமான முறையில் குறிப்பிட்ட வங்கிக்கு செலுத்தப்படும். அத்துடன் வட்டியில் உள்ள மாற்றங்கள் அரசாங்கத்தால் ஈடு செய்யப்படும்.

(iv) ஒரு ஊழியர் அரைச் சம்பளத்தக்கு உள்ளாக்கும்போது கடன் தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டியை அறவிடுவது சம்பந்தமாக குறிப்பிட்ட வங்கியின் பொதுவான விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படும்.

(v) எவ்வாறெனினும், மகப்பேற்று விடுமுறையில் உள்ள ஒரு பெண் ஊழியர் அரைச் சம்பளத்தில் இருக்கும் பட்சத்தில் வட்டி மற்றும் கடன் தவணைக் கொடுப்பனவுகள் பிரத்தியேகமாக வங்கிக்கு செலுத்தப்பட வேண்டும். அத்துடன் வட்டியில் உள்ள மாற்றங்கள் அரசாங்கத்தால் மீள் நிரப்பப்படும்.

(vi) ஒரு ஊழியர் சம்பளமற்ற விடுமுறையில் உள்ளபோது கடன் தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டி ஆகியவற்றை அறவிடுவது சம்பந்தமான வங்கியின் பொதுவான விதிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

(vi) ஊழியர் சேவையில் உள்ளபோது மரணம் சம்பவித்தால் அல்லது முழுமையாக அங்கவீனமற்ற நிலைக்கு ஆளாகும் பட்சத்தில் அரசாங்கத்தால் கடன் உத்தரவாதம் நிதியினூடாக வங்கிக்கு மாதாந்தம் செலுத்த வேண்டிய கடன் தொகை மீதியைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

(vii) ஊழியர் தற்காலிகமாக அரச கூட்டுத்தாபனம் / சட்ட அமைப்புக்களில் அல்லது மேல் கூறப்பட்டுள்ள 2 க்கு கீழும் சேவைக்காக தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட ஒருவராக இருந்தால் அவரால் செலுத்தப்பட வேண்டிய கடன் தவணைக் கொடுப் பனவுகள் மற்றும் வட்டி ஆகியவை உரிய பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்கள் ஊடாக வங்கிக்கு செலுத்தப்பட வேண்டும். அத்துடன் உரிய காலத்துக்குரிய வட்டி மாற்றங்களும் பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றால் செலுத்தப்படும். மேலும் அவர்கள் விடுவிக்கப்பட்ட

வேறு நிறுவனங்கள் அந்த சம தொகையை உரிய பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு மீள் நிரப்பப்படும்.

(viii) ஒரு ஊழியர் நிரந்தரமாக அரச கூட்டத்தாபனம் / சட்ட அமைப்பு ஆகியவற்றின் சேவைக்காக விடுவிக்கப்பட்டால் வட்டியையும் கடன் தவணைக் கொடுப்பனவு களையும் அறவிடுவதில் வங்கியினுடைய பொதுவான நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(ix) யாரேனும் ஒரு ஊழியர் ஏதாவது ஒரு காரணத்தின் பேரில் தற்கொலை செய்து கொண்டால் கடன் தவணை கொடுப்பனவை அறவிடுவது சம்பந்தமாக வங்கியின் பொதுவான விதிமுறைகள், ஒழுங்குமுறைகள் என்பன பின்பற்றப்படல் வேண்டும்.

**10. கடன் விண்ணப்பங்களை செயற்படுத்துவதற்கான கட்டணங்கள்**

சிபாரிசு செய்யப்பட்ட வங்கி ஒன்றிலிருந்து ஒரு கடன் பெறுவதற்காக வேண்டப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிப்பது சம்பந்தமாக எற்படும் எந்தவொரு செலவு சம்பந்தமாக உதாரணமாக, காணிப் பதிவிலிருந்து ஏற்படும் கணக்குகள், உருத்தறிக்கை, அளவைத் திட்டத்துக்கான கட்டணம், அட்டோர்ணி அதிகார பதவிற்கான கட்டணம் உருத்தில் ஏற்படும் எந்தவொரு பற்றாக்குறைக்குமான உருதிக் காப்புறுதி, வக்கீல் கட்டணங்கள் ஆகியவை விண்ணப்பதாரியால் பிரத்தியேகமாக செலுத்தப்படும்.

**11. சொத்து கடன்களுக்கான ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய பொதுவான நிபந்தனைகள்**

(i) ஒரு ஊழியரால் வழங்கப்படக்கூடிய கடன் தொகையை சிபாரிசு செய்கையில் அரசாங்கத்தால் செலுத்தப்படக்கூடிய வட்டி செலுத்தப்படும் போது பல்கலைக்கழுகங்கள் / உயர் கல்வி நிறுவனங்களால் பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படும்.

(அ) குறிப்பிட்ட கடன் தொகையைப் பரிந்துரைப்பதில் அலட்சியம் காரணமாக ஏற்படும் தவறுகள், அல்லது குறிப்பிட்ட சில சம்பவங்களால் அரசாங்கத்துக்கு ஏதேனும் நஷ்டம் விளைவிக்கப்படுமிடத்து,குறிப்பிட்ட கடனைக் கோரி அதன் மூலம் அரசாங்கத்திற்கு நஷ்டம் விளைவித்த சம்பந்தப்பட்ட ஊழியருக்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதுடன் அந்த நஷ்டமானது குறிப்பிட்ட ஊழியராலேயே நிரப்பப்படும்.

(ஆ) கடன் தொகையானது குறிப்பிட்ட ஊழியரின் மாதாந்த சம்பளத்திலிருந்து அதி கூடிய தொகையாக 40% குறைக்கப்படக்கூடிய அளவு விடுவிக்கப்படும்.

(ii) பிரிவு 11 (i) (ஆ) வின் விடயத்திற்குட்பட்டு குறிப்பிட்ட ஊழியரின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படும் கடமையான கழித்தல்கள், அத்துடன் வேறு வகை குறைத்தல்கள் ஆகியவற்றை கவனத்தில் எடுத்து, அதி கூடிய கடன் தொகையானது வங்கிக்கு பரிந்துரைக்கப்படும்.

## 12. கடன் விண்ணப்பங்களை பரிந்துரைத்தல் மற்றும் முன்னெடுப்பதற்கான நடைமுறை

(i) மேற்குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக கடன் பெறும் விண்ணப்பதாரி, இணைப்பு ஒன்றில் கூறப்பட்டதற்கிணங்க, உரிய பிரதிகளில் விண்ணப்பத்தை தயாரித்து, குறித்த பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் தாபனக் கிளைக்கும் அனுப்ப வேண்டும்.

(ii) இத் திட்டத்தின் கீழ் உரிய விண்ணப்பத்தாரிக்கு கடன் வழங்கல் சம்பந்தமாக உரிய பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் தாபனக்கிளையால் விண்ணப்பதாரியின் கடன் பெறு தகைமையை உறுதிப்படுத்தியதன் பின்னர், விண்ணப்பமானது இணைப்பு 01 இல் குறிப்பிட்டதற்கிணங்க, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் செயலாளர் / பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் பதிவாளர் ஆகியோரின் பிரத்தியேக பரிந்துரைகளுடன் பொருத்தமான வங்கிக்கு அனுப்பி வைக்கப்படும்.

(iii) வருடாந்தம் இத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன் விபரங்களை தரக் கூடிய வகையில் பல்கலைக்கழக / உயர் கல்வி நிறுவனம் ஆகியவை ஒரு சுருக்க அறிக்கையை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(iv) இத் திட்டத்தின் கீழ் மேலே பிரிவு 7 இல் குறிப்பிட்டதற்கிணங்க வங்கிகளால் மட்டுமே கடன்கள் வழங்கப்படும்.

(v) இத்தயை வழு முறைகளின் கீழ் உள்ளடக்கப்படாத எந்தவொரு பிரச்சனை மற்றும் விடயங்கள் வங்கியின் பொதுவான விதிமுறைகள் ஒழுங்குகள் ஆகியவற்றிற்கு உட்படுத்தப்படும்.

**பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுக்கான**

**சொத்து கடன் பெறுவதற்கான விண்ணப்பபபடிவம்**

1. உத்தியோகத்தரின் முழுப் பெயர் :
2. நிரந்தரப் பதவி ( வகுப்பு / தரம் (தற்போதைய):
3. தேசிய அடைய அட்டை இல. :
   (அ) நிரந்தர தனிப்பட்ட முகவரி :
   (ஆ) அலுவலகம் :
4. தொலைபேசி இல.
   (அ) தனிப்பட்ட :
   (ஆ) காரியாலய :
5. விண்ணப்பிக்கும் கடனுக்கான நோக்கம் :
   (பிரிவு – 1 ஐ பார்க்க)
6. விண்ணப்பிக்கும் கடன் தொகை (பிரிவு – 4.i ஐ பார்க்க):
7. கடன் பெறும் வங்கியின் பெயரும் கிளையும் (பிரிவு 7 ஐ பார்க்க):

இதன் கீழ் கொடுக்கப்பட்ட, வங்கியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகள், ஒழுங்கு முறைகளுக்கு ஏற்பவும் இந்த சுற்றறிக்கையால் கொடுக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கமையவும் நான் கடன் பெறுவதற்கு சம்மதிக்கிறேன்.

……………………………..

திகதி …………. கடன் விண்ணப்பதாரியின் ஒப்பம்

**…………………………………………பல்கலைக்கழகத்தின் / உயர்கல்வி நிறுவனத்தின் தாபன கிளைக்கு**

1. நியமனத் திகதி :

2. பிறந்த திகதி :…………………………விண்ணப்பித்த திகதியன்று வயது ……………

3. (அ) விண்ணப்பதாரி நிரந்தர பதவியில் உள்ளவரா?

   (ஆ) அவ்வாறெனில் எத் திகதியிலிருந்து?

4. ……………………………………பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிறுவனத்திலிருந்து ஏற்கனவே பெறப்பட்ட ஏதாவது கடன் சம்பந்தமான விபரங்கள்

| **கடனின் வகை** | **விண்ணப்ப திகதியன்று இருக்கும் மிதமுள்ள தொகை** |
|---|---|
| ……………………… | …………………………………… |
| ……………………… | …………………………………….. |
| …………………… | …………………………………… |
| …………………… | ……………………………………… |

5. மாதாந்த சம்பள விபரங்கள்

   (அ) இணைக்கப்பட்ட மாதாந்த சம்பளம்

   (ஆ) முற்கொடுப்பனவு

   (இ) மொத்த சம்பளம் (அ+ஆ – தொகை)

   (ஈ) மொத்தக் கழித்தல்கள் (கடமையான கழித்தல்களைச் சேர்த்து)

   (உ) தேறிய சம்பளம் (பொருத்தமான மாதத்திற்குரிய சம்பள விபரங்கள் இணைக் கப்பட வேண்டும்)

   (ஊ) இச் சுற்றறிக்கையின் பிரிவு (4) (i) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தருக்கு வழங்கப்படக்கூடிய அதி கூடிய தொகை

(இலக்கத்தில் ………………………………………………………………………………)

(எழுத்தில் …………………………………………………………………………………….)

6. அலுவலருக்கு எதிராக தீர்த்து வைக்கப்படாத நிலையில் இருக்கும் பிழையான நடத்தை தொடர்பான குற்றச் சாட்டுக்கள்அல்லது விசாரணையின் கீழ் உள்ள ஏதாவது பிழையான நடத்தை சார்பான குற்றச்சாட்டுக்களின் விபரங்கள்..........................

.........................................

திகதி................ சிரேஷ்ட உதவி/உதவிப் பதிவாளர்

பதிவாளர் - தாபனம்

**ப.மா.ஆ வின் செயலாளர் / பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்களின் பதிவாளர்கள் ஆகியோரின் பரிந்துரை**

எனது இலக்கம்.......................

பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிறுவகம்...............................................

முகாமையாளர்

...........................................வங்கி

...........................................கிளை

பல்கலைக்கழகங்கள்/உயர்கல்வி நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையிலான சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரமும், வங்கியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் ஓழுங்கு முறைகள் ஆகியவற்றின் பிரகாரமும் வங்கியினால் சிபாரிசிக்கப்பட்டதற்கிணங்க, நான் திரு. திருமதி செல்வி/ .............................. .என்பவருக்குரிய சொத்துக் கடன் கொடுப்பனவை அங்கீகரிக்கின்றேன்.

மேலும் நான், சொல்லப்பட்ட சுற்றறிக்கையின் பிரிவு 8 இன் பிரகாரம், வங்கியால் பரிந்துரைக்கப்பட்டதன்படி, அரசாங்கத்தால் செலத்தப்படக்கூடிய வட்டித்தொகை உள்ளடங்கலாக மாதாந்தம், வங்கியில் கணிக்கப்பட்ட கடன் தவணைப் பணத்தையும் ஊழியரால் அறவிடப்படக்கூடிய கடன் தவணைப் பணத்துக்கான வட்டித் தொகையையும் சேர்த்து ஊழியரின் சம்பளத்திலிருந்து கையளிக்க சம்மதிக்கின்றேன்.

கையொப்பம் ....................................

பெயர் .............................................

பதவி................................................

திகதி...............................................

அலுவலக முத்திரை ..........................